# DEPOSITION OF WITNESS

## (CHAPTER XXIII Code of Criminal Procedure)
## IN THE COURT OF PRINCIPAL SESSIONS JUDGE, SALEM

S.C.No.111/2019

Deposition of witness for Prosecution – PW12

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | ஜெயகுமார் | Caste | : | |
| S/o.W/o.D/o. | : | செல்வராஜ் | Calling | : | |
| Village | : | | Religion | : | |
| Taluk | : | | Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act No.44 of 1969, on this 28.01.2025.

A1 to A3 present.

**முதல் விசாரணை:**

நான் தற்போது சங்ககிரி வைகுந்தம் கிராமம், காந்தி நகரில் குடியிருக்கிறேன். நான் போர்வெல் வண்டி வைத்து தொழில் செய்து வருகிறேன். காளிப்பட்டி பிரிவுரோட்டை சார்ந்த ரமேஷ் எனது நண்பர். அவர் என் வீட்டிற்கு அருகில் உள்ளார். ரமேஷ் சங்ககிரியில் உள்ள திரிவேணி கார் கம்பெனியில் வேலை செய்து வந்தார். ரமேஷின் அண்ணன் பெயர் சந்திரசேகர். அவர் இன்று நீதிமன்றத்தில் ஆஜராகி உள்ளார். ரமேஷின் அப்பா நியூஸ் பேப்பர் ஏஜண்டாக வேலை பார்த்தார்.

ரமேஷின் அண்ணன் சந்திரசேகரும் ரமேசும் ஒரே வீட்டில் குடியிருந்து வந்தார்கள். நான் ரமேஷின் தகப்பனார் வீட்டிற்கு ஏதாவது விசேசம் என்றால் செல்வேன். 2019ம் வருடம் ஒரு நாள் ரமேஷ் எனக்கு போன் செய்தார். அப்போது நான் திருச்செங்கோட்டிலிருந்து ரிட்டன் வந்து கொண்டிருந்தேன். தன்னுடைய அப்பா இறந்துவிட்டதாக அவர் சொன்னார். நான் ரமேசின் வீட்டிற்கு வருவதற்கு முன்னர் அனைவரும் வந்துவிட்டார்கள். நான் ரமேசின் உறவினர்களுக்கு போன் செய்வது, சேர் அரேன்ஜ்மெண்ட் ஆகியவற்றை நான்தான் செய்தேன். ரமேஷின் அப்பாவை நான் பார்த்தபோது சாதாரணமாகதான் இருந்தார். முதலில் அவர் தற்கொலை செய்து கொண்டதாக சொன்னார்கள். பின்னர் ரமேஷ் தனது அப்பா இறப்பில் சந்தேகம் உள்ளதாக சொல்லி போலிசில் புகார் கொடுத்தார். போலிசார் வந்து விசாரித்தார்கள். வழக்கு பற்றி வேறு எதுவும் எனக்குத் தெரியாது.

சாட்சி பிறழ் சாட்சியாக கருதப்பட்டு, அரசு தரப்பு வழக்கறிஞர் சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி, அனுமதியளிக்கப்பட்டது.

<u>அரசுத்தரப்பில் குறுக்கு விசாரணை</u> :

போலிசார் என்னை விசாரித்தபோது 18.5.2018ம் தேதி இரவு 10.00 மணிக்கு ரமேஷ் எனக்கு போன் செய்ததாகவும் தனது அப்பா சின்னுசாமி பேச்சு மூச்சில்லாமல் மல்லார்ந்த நிலையில் படுத்திருப்பதாகவும் கையை தொட்டு பார்த்தபோது ஜில் என்று இருந்ததாகவும் சீக்கிரம் வாடா என்று சொன்னதால் நான், வீட்டிற்கு சென்றபோது செல்வராஜ் மற்றும் மணிகண்டன் ஆகியோர் இருந்ததாகவும், நான் வீட்டிற்குள் சென்று

பார்த்தபோது ரமேசின் அப்பா மூக்கின் மேல் ரத்தக்காயமும் கழுத்தின் இடதுபக்கம் லேசான காயத்துடன் கழுத்து இறுகி கன்றிபோய் மல்லார்ந்த நிலையில் இறந்துகிடந்தார்ள ன்றும் நான் ரமேசிடம் விசாரித்தபோது 18.5.2018ம் தேதி காலை 8.30 மணி சுமாருக்கு ரமேஷ் கார் வேலைக்கு சென்றதாகவும், மதியம் வீட்டிற் கு 1 மணிக்கு வந்து தனது அப்பாவை பார்த்து பேசிவிட்டு தண்ணீர் கொடுத்துவிட்டு வேலைக்கு சென்றதாகவும் வேலை முடித்து இரவு 10.00 சுமாருக்கு பார்த்தபோது வீட்டு கதவு பூட்டப்படாமல் சாத்தப்பட்டிருந்ததாகவும் வீட்டிற்குள் சென்று லைட் போட்டு பார்த்தபோது அவரது அப்பா மல்லார்ந்த நிலையில் அசைவின்றி கிடந்ததாகவும் வீடு மற்றும் பிரச்சனைக்குரிய நில பத்திரத்தை காணவில்லை என்று சொன்னதாகவும், அப்போது காந்தி நகரை சார்ந்த பொன்னுசாமி என்பவர் மாலை 3.00 மணி சுமாருக்கு ரமேசின் வீட்டிற்கு தென்னை மரத்தில் மட்டை வெட்டவந்தபோது சந்திரசேகரும் அவருடன் வந்த 2 பேரும் வீட்டிற்கு வந்துவிட்டு போனார்கள், அப்போது வீட்டில் அலறல் சத்தம் கேட்டதாக சொன்னார் என்றும் சந்திரசேகர்தான் சொத்திற்காக அவரது அப்பாவை 2 பேரை கூட்டி வந்து கழுத்தை இறுக்கி கொன்றுவிட்டு பத்திரத்தை எடுத்து சென்றுவிட்டார் என்று போலிஸ் விசாரணையில் சொல்லிவிட்டு ஆஜர் எதிரிகள் எனது நண்பர்கள் என்பதாலும் எனது வீட்டிற்கு அருகில் வசிப்பவர்கள் என்பதாலும் அவர்களை காப்பாற்ற வேண்டி தற்போது உண்மையை மறைத்து பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**1 முதல் 3 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.**

Sd/- S.Sumathy,
Principal Sessions Judge, Salem.